DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai.
DVC. No. 2 of 2024
Prosecution witness : PW - 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி. கீதா | Caste | : | |
| Fathers Name | : | திரு. ரமேஷ் | Calling | : | |
| Village | : | திருகண்டலம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 46 |

(Accused called Present.)
solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.11.2024 .

மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்கள் உள்ளதாக கூறி அதன் பின்னிட்டு இன்று நீதிமன்றத்தில் கூடுதல் ஆவணங்கள் இல்லை என்று புகார்தரா் தரப்பு வழக்கறிஞர் மற்றும் புகார்தாரர் கூறியதின் அடிப்படையில் புகார்தாரர் கூடுதல் ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை.

எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை பகல் 12.40

1. எதிர்மனுதாரும் நானும் விருப்பப்பட்டு பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான்.

2. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

3. திருமணம் நடைபெறும் போது நான் கன்னிகைபேரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் பணி செய்து வந்தேன் என்றால் சரிதான்.

4. எதிர் மனுதாரர் குடும்பத்தை காட்டிலும் உங்கள் குடும்பம் வசதியானது என்றால் சரிதான்.

5. எங்கள் இருவரின் திருமணத்தின் பயனாக இரண்டு குழந்தைகள் பிறந்தது அவர்களின் பெயர் ஆதவன் மகனும், மான்முகில் என்ற மகளும் உள்ளார். எனது மகன் வைஷ்னவா கல்லூரியில் இளங்களை தமிழ் படித்து வருகிறார். எனது மகள் வேல்ஸ் கல்லூரியில் பிஎஸ்சி கார்டியாலஜி படித்து வருகிறார்.

6. மேற்படி இருவருக்கும் 18 வயது பூர்த்தியாகியுள்ளது என்றால் சரிதான்.

7. மேற்படி இருவருக்கும் கல்விக்கான செலவுகளை எதிர் மனுதாரர் தான் செய்து வந்தார்கள் என்றால் சரிதான் ஆனால் கடந்த 4 ஆண்டுகளாக எதுவும் செய்யவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன். என்றாலும் எதிர் மனுதாரர் தான் கல்வி செலவை செய்து வந்ததை நிருபணம் செய்யும் விதமன ஆவணம் உள்ளது என்றால் சரியல்ல.

8. நான் கல்வி செலவு செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல்

செய்துள்ளீர்களா அல்லது தாக்கல் செய்வீர்களா என்றால் அரசு நிறுவனத்தில் தான் படித்தார்கள் அதனால் தாக்கல் செய்ய முடியவில்லை.

9. நான் இதற்கு முன்பு சாட்சியம் அளிக்கும் போது தனியார் கல்வி நிறுவனத்தில் படிப்பதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

10. 2024ம் ஆண்டிற்கான கல்வி தொகையை செல்வி வான்முகிழுக்கு எதிர் மனுதாரர் தான் செலுத்தியுள்ளார் என்றால் இந்த நீதிமன்றத்தில் சமரசம் பேசும் போது செலுத்துவதாக கூறினார் அதன் படி செலுத்தினார்.

11. 2024ம் ஆண்டிற்கான கல்வி தொகையை செல்வன் ஆதவன் எதிர் மனுதாரர் தான் செலுத்தியுள்ளார் என்றால் இந்த நீதிமன்றத்தில் சமரசம் பேசும் போது செலுத்துவதாக கூறினார் அதன் படி செலுத்தினார்.

12. நீதிமன்றத்தில் சமரசம் பேசும் போது எதிர் மனுதாரருடன் சமரம் எதவாது எற்பட்டதா என்றால் இல்லை.

13. எந்த வித உடன்படிக்கையும் எற்படதா போதும் அவர்களுக்கான கல்வி கட்டணத்தை செலுத்திவருகின்றார் என்றால் மகளுக்கு மட்டும் செலுத்தி வருகின்றார்.

14. இந்த வழக்கானது நான் சமுக நலத்துறை அலுவலகத்தில் புகார் அளித்ததின் பேரில் தான் தொடரப்பட்டது என்றால் சரிதான்.

15. சமுக நலத்துறை அலுவலகத்தில் நான் மனு அளிக்கும் போது பாதுகாப்பு உத்தரவு வேண்டியோ, பாரமாரிப்பு தொகை வேண்டியோ, இழப்பீடு வேண்டியோ, கோரவில்லை என்றால் சரியல்ல கோரியுள்ளேன்.

16. நான் மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனு உரிய அதிகார வரம்புடைய காவல் நிலையத்திற்கு அனுப்பிவைத்து இருதரப்பிலும் விசாரணை செய்து நான் அளித்த புகார் பொய்யான என்று முடித்து வைக்கப்பட்டது என்றால் சரியல்ல இருதரப்பு பேசப்பட்டது அந்த பெண் அவருடன் சேர்ந்து வாழ மாட்டேன் என்று காவல் நிலையத்தில் எழுதி கொடுத்து சென்று விட்டார்.

17. எனது இரு குழந்தைகளும் உரிமை வயது அடைந்து விட்டதால் அவர்களுக்காக ஜீவனாம்சம் கோரமுடியாது என்றால் சரியல்ல.

18. திருமணம் நடைபெற்றது முதல் இன்றைய தேதி வரைக்கும் எனக்கும் எங்களது குழந்தைகளுக்கும் மனுதாரர் தான் அனைத்து செலவுகளையும் செய்து வருகினறார்கள் என்றால் சரியால்ல ஒரு பெண் வந்த பின்பு செய்யவில்லை அதற்கு முன்பாக எங்கள் குடும்பத்தை நல்ல முறையில் தான் பார்த்துவந்தார்.

19. எங்களது பெண் குழந்தையான வான்முகில் எதிர் மனுதாரருடன் தான் இருந்து வருகின்றார் என்றால் 18 ஆண்டுகள் வரையிலும் என்னுடன் தான் இருந்து வந்தார்,

கடந்த 4 ஆண்டுகளாக அவருடன் இருந்தார், இங்கு சமரசம் பேசிய பின்பு எனது மகள் தந்தையுடன் இருந்து வருவதாக கூறினார் அதன் பேரில் நான் அனுப்பிவைத்தேன். என்னுடன் இருந்தால் கல்லூரிக்கு அழைத்துச்செல்லமாட்டார் அதனால் அவரிடம் செல்கிறேன் என்று கூறிவிட்டு சென்றார்.

20. எனது சகோதரர் ஜெகன் என்பவருக்கு எதாவது பணம் கொடுத்து உதவினீர்களா என்றால் இல்லை.

எதிர் மனுதாரர் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை 22.11.2024 அன்று ஒத்திவைக்கப்படுகின்றது.

சாட்சியம் முடிவுற்ற நேரம் பகல் 1.15